பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

27 03 2025 **THURSDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பங்களாதேஷ் தேசிய தினத்தையொட்டி, அந்நாட்டு மக்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

2. இந்தியா – சீனா இடையேயான இருதரப்பு உறவை மேம்படுத்த இருநாடுகளும் முயற்சி மேற்கொண்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

3. மத்திய அரசின் வக்ஃபு சட்டத்திருத்த மசோதாவை முழுமையாக திரும்பப்பெற வலியுறுத்தி தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

   இந்த தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பிஜேபி உறுப்பினர்கள் பேரவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

4. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத்து வாகனங்களுக்கும் 25 சதவீத வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்டிரம்ப் அறிவித்துள்ளார்.

5. அகமதாபாத் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஆரியன்ஷா – கரன்சிங் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<<<>>>>>

பங்களாதேஷ் தேசிய தினத்தையொட்டி, அந்நாட்டு மக்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அந்நாட்டு இடைக்கால அரசின் தலைமை ஆலோசகர் திரு முகமது யூனூஸுக்கு பிரதமர் எழுதியுள்ள கடிதத்தில், இருதரப்பு ஒத்துழைப்புகளுக்கு அடித்தளமாக உள்ள வரலாறு மற்றும் தியாகங்களுக்கு எடுத்துக்காட்டாக தேசிய தினம் திகழ்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

பங்களாதேஷ் விடுதலை போரில் காட்டிய உணர்வு, இருதரப்பு நட்புறவுக்கு தொடர்ந்து வழிகாட்டியாக திகழ்கிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

அமைதி, நிலைத்தன்மை மற்றும் பரஸ்பர நலன் அடிப்படையிலான இந்த ஒத்துழைப்புகளை மேலும் முன்னெடுத்துச் செல்ல உறுதிபூண்டுள்ளதாகவும் பிரதமர் தமது வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

இந்தியா – சீனா இடையேயான இருதரப்பு உறவை மேம்படுத்த இருநாடுகளும் முயற்சி மேற்கொண்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், கடந்த 2020-ஆம் ஆண்டு கல்வான் பள்ளத்தாக்கு பகுதியில் ஏற்பட்ட மோதல் காரணமாக, இருதரப்பு உறவு பாதிக்கப்பட்டதாக கூறினார்.

இந்த மோதல் இருநாடுகளுக்கு இடையேயான உடன்படிக்கைகளுக்கு எதிரானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், கடந்த அக்டோபர் மாதத்திற்கு பிறகு இந்தியா – சீனா நட்புறவில் முன்னேற்றம் ஏற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேபோன்று, அமெரிக்கா உடனான வர்த்தக உறவுகளை மேம்படுத்தவும் இருநாடுகளும் தீவிர ஆலோசனை நடத்தி வருவதாகவும், குறிப்பாக எரிசக்தித்துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்தி வருவதாகவும் திரு ஜெய்சங்கர் கூறினார்.

<<<<<<>>>>>

துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் மசூர் பருப்புகளை கொள்முதல் செய்ய மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு அதிகாரம் அளித்துள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டியளித்துள்ள அவர், குறைந்தபட்ச ஆதரவு விலை அடிப்படையில் மாநில அரசுகள் இந்த திட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஆந்திரா, கர்நாடகா, தெலங்கானா, மகாராஷ்ட்ரா, குஜராத் உள்ளிட்ட மாநிலங்களிலிருந்து **NAFED** அமைப்பு மூலம் துவரம் பருப்பு கொள்முதல் செய்யப்பட்டு வருவதாக கூறிய திரு சிவ்ராஜ் சிங் சௌகான், கடலை பருப்பு, மசூர் பருப்பு மற்றும் கடுகு போன்றவையும் பிரதமரின் ஆஷாத் திட்டத்தின்மூலம், கொள்முதல் செய்யப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>

பிரதமரின் தொழில் பழகுநர் திட்டம் குறித்து கம்பெனி விவகாரங்கள் துறை அமைச்சகம் இன்று காணொலி வாயிலான கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளது.

இந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கம்பெனி விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் உயரதிகாரிகள் மற்றும் வல்லுநர்கள் கலந்துகொண்டு, விண்ணப்பத்தாரர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்க உள்ளனர்.

அமைச்சகத்தின் கொள்கைகள் மற்றும் நடைமுறை விதிகள் குறித்து விரிவான விளக்கம் அளிக்கப்பட இருப்பதாகவும் அந்த அமைச்சகத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் திருமணத்திற்கு முந்தைய ஆலோசனை மையங்கள் ஏற்படுத்தப்பட உள்ளதாக தேசிய மகளிர் ஆணைய தலைவர் திருமதி விஜயா ரஹத்கர் தெரிவித்துள்ளார்.

பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த மையங்கள் மாவட்ட நிர்வாகம் அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் செயல்படும் என்றார்.

திருமணம் செய்துகொள்ள இருப்பவர்களுக்கு தேவையான ஆலோசனைகளை இந்த மையம் வழங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

திருமணம் பற்றிய பழக்கவழக்கங்கள் மற்றும் சமூக உளவியல் குறித்த தகவல்களும் இந்த மையங்களில் வழங்கப்படும் என்று திருமதி விஜயா ரஹத்கர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

மத்திய அரசின் வக்ஃப் சட்டத்திருத்த மசோதாவை முழுமையாக திரும்பப்பெற வலியுறுத்தி, தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த தீர்மானத்தை தாக்கல் செய்து பேசிய முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், வக்ஃப் சட்டத்திருத்த மசோதா அரசியல் சாசன உரிமைகளுக்கு எதிராக உள்ளது என்றார்.

மேலும், வக்ஃப் வாரியத்தின் அதிகாரங்களை பறிப்பதாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதையடுத்து, அனைத்துக்கட்சி உறுப்பினர்களும் பேசிய பின்னர், பிஜேபி தவிர அஇஅதிமுக, பாமக உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்னதாக, இந்த தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பிஜேபி உறுப்பினர்கள் திருமதி வானதி சீனிவாசன் தலைமையில் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திருமதி வானதி சீனிவாசன், வக்ஃப்பு சட்டத்திருத்தத்தை கொண்டுவர மத்திய அரசுக்கு அதிகாரம் உள்ளதாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>

தமிழக மீனவர்கள் 11 பேர் எல்லைதாண்டி மீன்பிடித்ததாக கூறி, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ராமேஸ்வரம் பகுதியிலிருந்து சென்ற இவர்கள், நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - கார்த்திகேயன் - 41 செகண்ட்ஸ்)*

இதனிடையே, கடந்த பிப்ரவரி 20-ஆம் தேதி கச்சத்தீவு அருகே இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு, யாழ்பாணம் சிறையில் அடைக்கப்பட்டிருந்த தங்கச்சி மடம் பகுதியை சேர்ந்த ஏழு மீனவர்கள் இன்று காலை விமானம் மூலம் சென்னை வந்தடைந்தனர்.

பின்னர் அவர்கள் சொந்த ஊருக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

<<<<<<>>>>>

வெளிநாடுளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத்து வாகனங்களுக்கும் 25 சதவீத வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபா் திரு டொனால்டு ட்டிரம்ப் அறிவித்துள்ளாா்.

இந்த வரி விதிப்பு வரும் ஏப்ரல் 2-ஆம் தேதிமுதல் நடைமுறைக்கு வரும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அமெரிக்க பொருட்களுக்கு அதிக வரி விதிக்கும் நாடுகளுக்கு எதிராக பதில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று ஏற்கனவே தெரிவித்த நிலையில், அதிபர் திரு ட்ரம்ப் தற்போது இதற்கான உத்தரவில் கையெழுத்திட்டுள்ளார்.

அதிபர் திரு ட்ரம்பின் இந்த நடவடிக்கை மிகவும் வருந்தத்தக்கது என்று ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் திருமதி **Ursula Von Der Leyen** தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற வரி விதிப்புகள் வர்த்தகத்தை பாதிப்பதோடு, நுகர்வோருக்கும் அதிக சுமையை ஏற்படுத்தும் என்று அவர் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீர், இமாச்சலப்பிரதேசம், உத்தராகண்ட் மாநிலங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வுமையம் கூறியுள்ளது.

பஞ்சாபின் சில பகுதிகளிலும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ள அந்த மையம், கேரளா, தமிழகம் மற்றும் புதுச்சேரி காரைக்காலில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

ஆந்திராவில் நாளை முதல் இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்யும் என்றும், நாட்டின் சில பகுதிகளில் அடுத்துவரும் இரண்டு நாட்களில், இரண்டு முதல் மூன்று டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் அதிகரிக்கக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

வருவாய்க்கு அதிகமாக சொத்து சேர்த்தது மற்றும் ஊழல் குற்றச்சாட்டின்பேரில் பாட்னாவில் பீகாரை சேர்ந்த ஐ ஏ எஸ் அதிகாரி திரு **Sanjiv Hans-**க்கு சொந்தமான இடங்களில் அமலாக்கத்துறையினர் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

திரு **Sanjiv Hans** பீகார் அரசின் எரிசக்தித்துறை செயலாளராக பணியாற்றியபோது, டெண்டர்களை முடிவு செய்வதில் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டதாக எழுந்த குற்றச்சாட்டின்பேரில், இந்த சோதனை நடத்தப்படுகிறது.

<<<<<<>>>>>

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட குறுகிய தொலைவு செங்குத்து ரக ஏவுகணையை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.

தரையிலிருந்து வானில் உள்ள இலக்கை தாக்கும் இந்த ஏவுகணை சோதனை, ஒடிஷா மாநிலம் சந்திப்பூர் கடற்பகுதியில் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

அகமதாபாத்தில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஆரியன்ஷா – கரன்சிங் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 6-3, 6-1 என்ற செட் கணக்கில், ரஷ்யாவின் **'Nikita Lanin -** இத்தாலியின் **Alexandr Binda** இணையை வென்றது.

**<<<<<<>>>>>**